

இம்மானுவேல் சேகரன் அவர்களின் 69வது நினைவு நாளினை முன்னிட்டு திருத்துறைப்பூண்டி நகர தி.மு.க. சார்பில் மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் இம்மானுவேல் சேகரன் அவர்களின் திரு உருவப்படத்திற்கு புகழ்அஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினார். நகரச் செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன், ஒன்றியச் செயலாளர் பால. ஞானவேல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.ஆடலரசன், முன்னாள் ஒன்றியச் செயலாளர் முகில் ராஜேந்திரன், மாவட்ட சார்பு அணி சிக்கந்தர்,வினோத்குமார், ஐ.ஜி.எஸ். ஜாகிர் உசேன், வி.பி.பிரபாகரன், எஸ்.பி.பாஸ்கர், அவைத்தலைவர்கள் வி.சிதம்பரம்,நாகைய்யன் உள்ளிட்ட நிர்வாகிகள், கழகத்தோழர்கள் உடன் இருந்தனர்.

### தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைக்கு

# ஈரோடு தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி வேண்டுகோள்!

*ஈரோடு, செப். 12-*

ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பேரறிஞர் அண்ணா பிறந்தநாள், தந்தை பெரியார் பிறந்தநாள், தி.மு. கழகம் உதயமான நாள் ஆகிய சிறப்பான நாட்களை ஒருங்கிணைத்து முப்பெரும் விழாவாக திராவிட முன்னேற்ற கழகம் கொண்டாடி வருகிறது. எனவே, ஈரோடு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான 15.09.2026 அன்றும், தந்தைபெரியார் பிறந்தநாள் மற்றும் தி.மு.கழகம் உதயமான நாளான 17.09.2026 அன்றும் கீழ்க்கண்ட பட்டியல் படி தந்தை பெரியார்,



பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் படங்களுக்கும், சிலைகளுக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படவுள்ளது.

**15.09.2026**

**செவ்வாய்க்கிழமை**

நேரம், இடம் விவரம் வருமாறு:-

காலை 9.30 மணிக்கு - பெரியார் நகர் முகாம் அலுவலகம்,

காலை 9.45 மணிக்கு - கலைஞர் அறிவாலயம், மணல்மேடு மாவட்ட கழக அலுவலகம்.

காலை 10.00 மணிக்கு - வீரப்பன்சத்திரத்தில் உள்ள அண்ணா அவர்களின் திருவுருவ சிலை.

காலை 10.30 மணிக்கு - பன்னீர்செல்வம் பூங்காவில் உள்ள தந்தைபெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை.

**17.09.2026**

**வியாழக்கிழமை**

காலை 9.30 மணிக்கு - பெரியார் நகர் முகாம் அலுவலகம்.

காலை 9.45 மணிக்கு - கலைஞர் அறிவாலயம், மணல்மேடு மாவட்ட கழக அலுவலகம்.

காலை 10.30 மணிக்கு - பன்னீர்செல்வம் பூங்காவில் உள்ள தந்தைபெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலை.

எனவே, மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், ஊர் கிளை கழக நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக உடன் பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### பெரம்பலூர் மாவட்ட

# தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!


## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், செப். 12–

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து பெரம்பலூர் மாவட்டடக கழக பொறுப்பாளர் வீ ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:–

கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி. வழிகாட்டுதல்படி, சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து தி.மு.க. சார்பில் வருவாய் மாவட்டத் தலை நகரங்களில் 12.09.2026 சனிக்கிழமை இன்று “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறு” என்று தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்தையும், ஐந்து முறை இந்த நாட்டை ஆண்டமுதலமைச்சர் தலைவர் கலைஞரையும் இந்தியாவின் புகழை தோகா மாநாட்டில் நிலைநாட்டிய பொருளாதார மேதை முரசொலி மாறனையும், திருமணம் ஆன ஐந்தே மாதத்தில், 23 வயதில் MISA (Maintenance of Internal Security Act) அவசர நிலைச் சட்டத்தில் கைதாக்கப்பட்டு சிறைச்சாலை சித்திரவதைகளை



அனுபவித்து, ஓராண்டு காலம் சிறையில் இருந்த தியாகத்தைச் செய்ததலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தியாகத்தை கொச்சைப்படுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் விஜய் பேசிய பேச்சு கடுமையான கண்டனத்துக்குரியது. அரசியல் உலகில் இத்தகைய அருவெறுப்பான உரையை சட்டமன்றம் கண்டிருக்காது.

அவரது உரை மூலமாக சட்டமன்றத்தின்மாண்பு – மரபு வரலாறு இவை அனைத்தும் காற்றில் பறக்கிறது. படங்களாக அந்த அவையில் நிற்கிறவர்கள் தலைகவிழ்ந்து கண்ணீர் வடித்திருப்பார்கள். சில அமைச்சர்கள் சட்டமன்றத்தில் தான் பேசுவது தவறு என்று தெரிந்தே பேசி, ‘மீம்ஸ்’, ‘ரீல்ஸ்’ஐ வெளியிடுகிறார்கள். நேரலை மூலமாக மக்களை சென்றடைந்த பிறகு அதை ஒப்புக்குஅவைக் குறிப்பில் இருந்து நீக்கிக் கொள்கிறார்கள். இப்படியாக தந்திர மேடையாக சட்டசபையை த.வெ.க. அரசு பயன்படுத்துகிறது.

ஆட்சியின் தோல்விகளுக்கு பதில்சொல்ல முடியாமல் தப்பித்துக் கொள்ள, கொச்சையான பேச்சுகளைப் பேசும் தரமற்றமனிதராக முதலமைச்சர் விஜய் மாறியிருக்கிறார். இவரது இப்பேச்சைக் கண்டிக்கும்வகையில், பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று 12.09.2026 சனிக்கிழமை காலை 10.30. மணியளவில், பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில், மாவட்டக் கழகச்செயலாளர் (எனது) தலைமையில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறுகிறது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளில் உள்ள நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ .ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**புதுக்கோட்டை க. வீரய்யா**

**செப்டம்பர் 12 (1993)**



**புதுக்கோட்டை மாவட்டத்தின் கழகத் தூண்களில் ஒருவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்.**

**தி.மு.கழகத்தின் சொத்து பாதுகாப்பு உறுப்பினராகவும், தலைமை நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

### மதுராந்தகம்–தாராபுரம் இடைத்தேர்தல் பணிகள்!

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி மதுராந்தகம்-தாராபுரம் இடைத்தேர்தல் பணிகள் குறித்து தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசனைக் கூட்டங்கள் அணியின் செயலாளர் **முனைவர் டி.ஆர்.பி.ராஜா** அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளன.

**தாராபுரம் தொகுதி** இடைத்தேர்தலுக்கான ஆலோசனைக் கூட்டம் 12–9–2026 **சனிக்கிழமை மாலை 4.30 மணி அளவில்** தாராபுரத்தில் நடைபெறும்.

**மதுராந்தகம் தொகுதி** இடைத்தேர்தலுக்கான ஆலோசனைக் கூட்டம் 13–9–2026 **ஞாயிறு மாலை 6 மணி அளவில்** மதுராந்தகத்தில் நடைபெறும்.

இந்த இரண்டு தொகுதிகளுக்குட்பட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில-மாவட்ட-தொகுதி-ஒன்றிய-நகர-வட்ட-பாக நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை
நாள்- 10.09.2026

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர், தகவல் தொழில்நுட்ப அணி தி.மு.க.

### பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட

# பொதுமக்கள் - மீனவர்களின் எதிர்ப்பை மீறி அரசாணை வெளியீடு!

## த.வெ.க. அரசின் ஆணவச் செயலுக்கு பலரும் கண்டனம்!

*சென்னை, செப்.12-*

சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட பொதுமக்களும், மீனவர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கடலை பார்த்தபடி முதல்வர் அறை இருக்க வேண்டும் என விஜயின் ஜோதிடர் கூறியதற்காக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அடியோடு அழிப்பதா என மீனவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதனையும் மீறி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

சென்னை பட்டினப்பாக்கத்தில் த.வெ.க. அரசு புதிதாக தலைமைச் செயலகம் கட்டப்பட உள்ள பகுதியில், முள்ளிக்குப்பம், சீனிவாசபுரம், ராஜீவ் காந்தி நகர், பவானி குப்பம், இருதயபுரம், செல்வராஜ்புரம், டுமிங் குப்பம், நொச்சி நகர், நொச்சிக்குப்பம் ஆகிய 9 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மக்கள், மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதியில் புதிய தலைமைச் செயலகம் அமையும் பட்சத்தில், தங்களுடைய வாழ்வாதாரம் அடியோடு பாதிக்கப்படும் என மீனவர்கள் அச்சமடைந்துள்ளனர். மேலும், பட்டினப்பாக்கம், சாந்தோம், மயிலாப்பூர் ஆகிய பகுதிகள் பள்ளி மண்டலமாக உள்ள நிலையில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் இப்பகுதிகளில் உள்ள பள்ளிகளில் படித்து வருகின்றனர். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான், ஏற்கனவே ஆட்சி புரிந்த திமுக, அதிமுக அரசுகள், புதிய தலைமைச் செயலகம் கட்ட பட்டினப்பாக்கத்தை தேர்வு செய்யவில்லை.

ஆனால், கள நிலவரத்தையே கருத்தில் கொள்ளாமல் இடத்தை மட்டும் கணக்கில் கொண்டு தவெக அரசு எடுத்துள்ள முடிவு மீனவ மக்களை அச்சமடைய வைத்துள்ளது. விஜயின் வீட்டின் அருகே தலைமைச்செயலகம் வேண்டும் என்பதற்காக பட்டினம்பாக்கத்தை தேர்வு செய்வதா என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கடலை பார்த்தபடி முதல்வர் அறை இருக்க வேண்டும் என விஜயின் ஜோசியர் கூறியதற்காக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அடியோடு அழிப்பது எந்த வகையில் நியாயம்? என்றும் மீனவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

பிரச்சாரங்களில் மீனவர்களின் நண்பன் என வசனம் பேசிவிட்டு, முதலமைச்சரானதும் மீனவர்களுக்கு எதிராக விஜய் நடந்து கொள்கிறார் என்றும் சினிமாவில் எளிதாக வசனம் பேசி சென்றுவிடலாம் நிஜத்தில் மக்களின் நலனை விஜய் அரசு கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் மீனவ மக்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் நலத்திட்டங்களுக்கு நிதி இல்லை ஆனால், முதல்வருக்கு புதிய அறை, புதிய தலைமைச்செயலகம் கட்ட மட்டும் எங்கிருந்து பணம் வந்தது? த.வெ.க. எம்எல்ஏக்களுக்கு கார் வழங்க எங்கிருந்து நிதி வந்தது? எனவும் மீனவ மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும் நொச்சிக்குப்பம், சீனிவாசபுரம், முள்ளிக்குப்பம் உள்ளிட்ட 9 கிராமங்கள் மட்டுமின்றி, பழவேற்காடு முதல் கோவளம் வரை உள்ள மீனவ அமைப்புகள் ஒன்று சேர்ந்து வரும் 15-ஆம் தேதி ஆலோசனைக் கூட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர். புதிய தலைமைச் செயலகம் கட்டும் முடிவை த.வெ.க. அரசு கைவிட மறுக்கும் பட்சத்தில், தொடர் போராட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளதாகவும் மீனவ சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே, பொதுமக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி பட்டினப்பாக்கத்தில் தலைமைச்செயலகம் கட்டுவதற்கான அரசாணையை தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ளது. 22 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் 20 லட்சம் சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் 1200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும் என்று அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### முதலமைச்சரின் தரம் தாழ்ந்த பேச்சைக் கண்டித்து

# திருப்பூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி. அறிக்கை!



திருச்சி, செப். 12–

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

ஆட்சியின் தோல்விகளுக்கும், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் பதில் சொல்ல முடியாமல், அவற்றைத் திசைதிருப்பும் நோக்கில் கொச்சையான பேச்சுகளை முதலமைச்சர் விஜய் பேசி வருவதாக தி.மு.க. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், அரசின் நிர்வாகத் தோல்விகள், சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களுக்கு உரிய விளக்கம் அளிக்க வேண்டிய பொறுப்பில் இருக்கும் முதலமைச்சர், அவற்றுக்குப் பதிலளிப்பதைத் தவிர்த்து தரம் தாழ்ந்த அரசியல் பேச்சுகளை முன்வைப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என தி.மு.க. சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“ஆட்சியின் தோல்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தப்பித்துக் கொள்ள, கொச்சையான பேச்சுகளைப் பேசும் தரமற்ற மனிதராக முதலமைச்சர் விஜய் மாறியிருக்கிறார் எனக் கண்டனம் தெரிவித்துள்ள தி.மு.க. தலைமைக்கழகம், அவரது பேச்சைக் கண்டித்து தமிழகம் முழுவதும் வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த அறிவுறுத்தியுள்ளது. அதன்படி, 12.09.2026 சனிக்கிழமை இன்று காலை 09.00 மணியளவில் திருப்பூர் ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள பேரன அண்ணா தந்தை பெரியார் சிலை முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட இந்நாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், இந்நாள் மற்றும் முன்னாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாகக் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றிடச் செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சி.என்.ஆர். (எ) சி.என்.ரத்தினம்**

**செப்டம்பர் 12 (2019)**



**வடசென்னை பகுதியில் கழகம் வளர்த்தவர்களின் ஒருவர்.**

**ஆர்.கே.நகர் பகுதிச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பிராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**